T

முதல் இடைப்பருவத் தேர்வு - 2022

ஒன்பதாம் வகுப்பு

பதிவ எண்: | | | | | | |

நேரம்: 1. 30 மணி

தமிழ்

மதிப்பெண்கள்: 50

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 7×1=7

1. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தாமணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு .....
   அ) வேற்றுமைத் தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
   இ) பண்புத் தொகை ஈ) வினைத்தொகை
2. தமிழ்விடுதூது ..... என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
3. நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
   அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி
4. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ) மறுமை ஆ) பூவரசுமரம் இ) வளம் ஈ) பெரிய
5. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம் .....
   அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்
6. பொருந்தாத இணை எது?
   அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
   இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்
7. மிசை - என்பதன் எதிர்ச்சொல் என்ன?
   அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

II. ஐந்து வினாவிற்கு விடையளி (14 வது வினா கட்டாய வினா) 5×2=10

8. கண்ணி - என்பதன் விளக்கம் யாது?
9. வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.
10. உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே - குறிப்பு தருக.
11. கூவல் என்றழைக்கப்படுவது எது?
12. ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறு பெயர்களை கூறுக.
13. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
14. "தரும்" என முடியும் குறட்பாவினை எழுதுக.

III. மூன்று வினாவிற்கு மூன்று வரிகளில் விடையளி (18 வது வினா கட்டாய வினா) 3×3=9

15. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?
16. தன்வினை- பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.
17. சோழர் கால குமிழித் தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?
18. "காடெல்லாம்" எனத்தொடங்கும் பெரியபுராணப் பாடலை எழுதுக.

IV. எவையேனும் மூன்றிற்கு விடையளி: 3×2=6

19. மொழி பெயர்க்க: அ) Literature ஆ) Phonetics
20. *பொருத்தமான வினைமுற்றாக மாற்றி எழுதுக:*
    அ) உலகில் மூவாயிரம் மொழிகள் ..... (பேசு)
    ஆ) குழந்தைகள் அனைவரும் சுற்றுலா ..... (செல்)
21. *தொடரில் அமைத்து எழுதுக:* அ) மேடும் பள்ளமும் ஆ) மேலும் கீழும்
22. *பகுபத உறுப்பிலக்கணம் தருக:* நிறுத்தல்

V. பின்வரும் இரண்டு வினாவிற்கும் விடையளி: 2×5=10

23. உங்கள் நண்பர் பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.
24. மாணவர்களாகிய உங்களுடைய பொறுப்புகளை குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.

VI. ஒரு பக்க அளவில் ஏதேனும் ஒன்றிற்கு விடையளி: 1×8=8

25. தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக. **(அல்லது)**
26. ஏறு தழுவுதல் தமிழனின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.